தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

1993, பிப்ரவரி 9, செவ்வாய்க்கிழமை.

தை 27, ஆங்கீரச—திருவள்ளுவர் ஆண்டு 2024.

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''நயன்ஈன்று நன்றி பயக்கும் பயன்ஈன்று
பண்பின் தலைப்பிரியாச் சொல்.''

பிறருக்கு பயனைத் தந்து நல்ல பண்புகளிலிருந்து நீங்காத இனிய சொற்கள் ஒருவருக்கு இன்பத்தையும் தரும்; நன்மையையும் பயக்கும்.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள். வினா எண் 21, செல்வி கோ. மல்லிகா, மாண்புமிகு நிதி அமைச்சர்.

21—

சின்னூர் கிராமத்திற்கு வாக்குச்சாவடி அமைத்தல்.

*14230—செல்வி கோ. மல்லிகா :
மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரங்கிப் பேட்டை ஒன்றியத்திலுள்ள சின்னூர் கிராமத்திற்கு வாக்குச்சாவடி அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன், நிதி அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : சின்னூர் கிராமத்தில் சுமார் 629 வாக்காளர்கள் உள்ளனர். இவ்வாக்காளர்கள் தற்போது சுமார் 1 கி.மீ. தூரத்தில் உள்ள சி.புதுப்பேட்டை ஊராட்சி

ஒன்றிய ஆரம்பப் பள்ளியில் அமைக்கப்பட்டுள்ள வாக்குச் சாவடிகட்குச் சென்று வாக்களிக்கின்றனர். கடந்த பொதுத் தேர்தலின்போது இந்த வாக்காளர்கட்கு எந்தவித சிரமமும் ஏற்படவில்லை. எனவே, தற்போது இக்கிராமத்தில் தனியாக வாக்குச் சாவடி அமைத்துக் கொடுக்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லை.

செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சின்னூர் கிராம மக்கள் புதுப்பேட்டை கிராமத்திற்கு சென்றுதான் ஓட்டு அளிக்க வேண்டும். இரண்டு கிராம மக்களுக்கு இடையே முன்னர் ஏற்பட்ட தகராறு காரணமாக சின்னூர் கிராம மக்கள் புதுப்பேட்டைக்குச் சென்று ஓட்டு அளிக்க மறுத்து விட்டனர். ஜனநாயகத்தில் ஒவ்வொரு குடிமகனும் வாக்கு அளிக்க வேண்டிய கடமை உள்ளவனாக இருக்கின்ற காரணத்தால் இந்த சின்னூர் கிராம மக்களுக்கு இதய தெய்வம் டாக்டர் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில் தனியே வாக்கு அளிக்க வாக்குச் சாவடி ஏற்படுத்தித் தர முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறைந்தது 750 வாக்காளர்கள் இருக்கின்ற அளவுக்கு ஒரு வாக்குச்சாவடி அமைக்கப்படுகின்றது. அந்த அளவிலே தான் நாட்டினுடைய பல்வேறு தொகுதிகளிலேயும் ஆங்காங்கு இருக்கிற இடத்திற்கு ஏற்பவும், ஆங்காங்கு இருக்கிற வாக்காளர்களுடைய எண்ணிக்கைக்கு ஏற்பவும் வாக்குச்சாவடிகள் அமைந்து வருகின்றன. புவனகிரி சட்டமன்றத் தொகுதியிலுள்ள பரங்கிப்பேட்டை ஒன்றியத்திலுள்ள சின்னூர் கிராமத்திற்கு வாக்குச்சாவடி அமைத்துக் கொடுக்க தற்போது செயற் குறிப்பு எதும் இல்லை. சின்னூர் கிராமத்திலுள்ள வாக்காளர்கள் தற்போது சி. புதுப்பேட்டையிலுள்ள ஊராட்சி ஒன்றிய ஆரம்பப்பள்ளி வாக்குச் சாவடி எண். 70 ஆண்களுக்கும் மற்றும் எண். 70 பெண்களுக்கும் என்று இரண்டு வாக்குச் சாவடிகள் அங்கே இருக்கின்றன. ஒவ்வொரு சிறு கிராமத்திலேயும் சச்சரவு இருக்கிறது, சண்டை இருக்கிறது என்பதற்காக, எண்ணிக்கை குறைவான இடத்தில் வாக்குச்சாவடி ஏற்படுத்துவதற்கு செயற் குறிப்புகள் இல்லை. மேலும், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களைக் கேட்டபோது, அவர்கள் சி. புதுப்பேட்டை கிராமத்திற்கு சின்னூர் கிராமத்திலிருந்து சென்று வர சாலை வசதிகள் இருக்கின்றன என்றும், தகுந்த இடைவெளியில் பேருந்து வசதிகள் இருக்கின்றன என்றும், எனவே சின்னூர் கிராமத்திலே தனியாக ஒரு வாக்குச்சாவடி அமைக்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லை என்றும் தெரிவித்து இருக்கிறார்கள். ஆகவே, இந்த நிலையில் அங்கே தனியே வாக்குச் சாவடி தேவையில்லை என்ற முடிவுக்கு அரசு வந்து இருக்கிறது.